TOTAL PAGES: 2

**22LAT303N / 22LAT303**

**PSG COLLEGE OF ARTS & SCIENCE**
(AUTONOMOUS)

**BA & BSc DEGREE EXAMINATION DECEMBER 2025**
(Third Semester)

Common to – **BA & BSc PROGRAMMES**

**TAMIL - III**

Time: Three Hours Maximum: 75 Marks

**பகுதி-அ** **(5x1=5)**

**ஒரு சொல் தொடரில் விடையளிக்க.**

1. சிலப்பதிகாரத்தின் எந்தக் காண்டத்தில் காட்சிக்காதை அமைந்துள்ளது?

2. சூளாமணிக் காப்பியத்தின் ஆசிரியர் பெயரைக் குறிப்பிடுக.

3. தேம்பாவணி காப்பியம் கூறும் மகிழ்வினைப் படலத்தின் விழுமியம் யாது?

4. கந்தபுராணம் எத்தனை காண்டங்களை உடையது?

5. பிலம் - பொருள் தருக.

**பகுதி- ஆ** **(8x5=40)**

**ஒரு பக்க அளவில் விடையளிக்க.**

6. அ. கண்ணகியின் வாழ்வியலைக் கேட்ட சேர மன்னனின் செயல்பாடுகளைக் காட்சிக் காதையின் வழி விவரித்து எழுதுக.
(அல்லது)
ஆ. ஆபுத்திரனின் பண்பு நலன்களை மணிமேகலைக் காப்பியம் எங்ஙனம் எடுத்துரைக்கிறது?

7. அ. இளவேனிற் பருவ வரவினால் இராசமாபுரத்து மக்கள் கொண்ட ஆரவார நிகழ்வுகளைக் குணமாலையார் இலம்பகம் மூலம் விவரிக்க.
(அல்லது)
ஆ. அமைச்சர்களின் மாண்புகள் குறித்து, சூளாமணிக் காப்பியம் உரைப்பவற்றை எழுதுக.

8. அ. கைகேயியை மனமாற்றத்திற்கு உட்படுத்த, மந்தரை செய்த சூழ்ச்சிகள் யாவை?
(அல்லது)
ஆ. சகாதேவன் கிருஷ்ணனைக் கட்டிய பாங்கை வில்லிபாரதம் வழி எடுத்துரைக்க.

9. அ. மரியாளையும் குழந்தை ஏசுவைக் குறித்தும் சூசையப்பர் போற்றும் திறத்தை விரித்துரைக்க.
(அல்லது)
ஆ. நபியின் மகத்துவத்தை 'கள்வரை நதி மறித்த படலம்' - மூலம் விளக்குக.

10. அ. நமிநந்தியடிகள் நாயனார் புராணம் எவ்வாறு சமதர்மக் கோட்பாட்டை உணர்த்துகிறது?
(அல்லது)
ஆ. அயனை எதன் பொருட்டு முருகன் சிறை செய்கின்றார்?

11. அ. இராவண காவியத்தின் தாய்மொழிப்படலம் வழி தமிழ் மொழியின் பெருமைகளை விவரித்து எழுதுக.
(அல்லது)
ஆ. உதாரனின் எழுச்சி உரையைப் பாரதிதாசனின் புரட்சிக்கவி வழி எடுத்துரைக்க.

**Cont...**

12. அ. தொல்காப்பிய மரபியல் சுட்டும் இளமைப் பெயர்களை எழுதுக.
(அல்லது)
ஆ. ஆண்பால் மரபுப் பெயர்களைச் சான்றுடன் விவரிக்க.

13. அ. தொல்காப்பியம் காட்டும் பெண்பால் மரபுப் பெயர்களைச் சான்றுடன் விவரிக்க.
(அல்லது)
ஆ. தொல்காப்பியம் குறிப்பிடும் அறுவகை உயிர்ப் பாகுபாட்டைத் தொகுத்துரைக்க.

**பகுதி- இ** **(3x10=30)**

**கட்டுரை வடிவில் விடையளிக்க.**

14. அ. எஸ். ராமகிருஷ்ணன் இயற்கையின் இரசிகர் என்பதை தேசாந்திரி கட்டுரைகளின் வழிப் புலப்படுத்துக.
(அல்லது)
ஆ. தேசாந்திரி கட்டுரை நூல் வெளிப்படுத்தும் வரலாற்றுப் பின்புலங்களைத் தொகுத்துரைக்க.

15. அ. கட்டபொம்மு துரையின் முன்னோர் இடம் பெயர்வதற்கானச் சூழல்களை ஆராய்க.
(அல்லது)
ஆ. கட்டபொம்முவின் வீரத்தினை, கட்டபொம்மு கூத்து வழி விவரிக்க.

16. அ. காப்பியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரைக்க.
(அல்லது)
ஆ. நாடகம் தோன்றி வளர்ந்த வரலாற்றை ஆராய்க.

**Z-Z-Z** **END**